
## சந்திரன், சூரியனை தொடர்ந்து ககன்யான் பரிசோதனையை தொடங்குகிறது இஸ்ரோ




கோப்புப்படம்

**புதுடெல்லி:** சந்திரயான்-3, ஆதித்யா எல்-1 வெற்றிக்குப்பின், ககன்யான் முதல் பரிசோதனை திட்டத்தை இஸ்ரோ அடுத்த மாதம் மேற்கொள்கிறது.

சந்திரயான்-3 திட்டத்தை வெற்றிகரமாக முடித்த இஸ்ரோ, சூரியனை ஆய்வு செய்வதற்காக ஆதித்யா -எல்1 விண்கலத்தையும் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.

அடுத்ததாக விண்ணுக்கு மனிதர்களை அனுப்பும் ககன்யான் திட்டத்தை செயல்படுத்த இஸ்ரோ தீவிரமாக உள்ளது. அதன்படி முதல் பரிசோதனை திட்டத்தை இஸ்ரோ மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. ககன்யான் திட்டத்தில் முதல் இரண்டு ராக்கெட்டுகளில் ஆளில்லா விண்கலம் அனுப்பி பரிசோதிக்கப்படும். அடுத்ததாக பூமியிலிருந்து 300 முதல் 400 கி.மீ தூரத்தில் உள்ள புவியின் கீழ் அடுக்கு சுற்றுவட்ட பாதையில் விண்வெளி வீரர்கள் சில நாட்கள் சுற்றிவிட்டு திரும்பும் வகையில் விண்கலத்தை அனுப்ப இஸ்ரோ திட்டமிட்டுள்ளது. பாராசூட் உட்பட ககன்யான் திட்டத்துக்கான பல பரிசோதனைகள் முடிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் சூரியனை ஆய்வு செய்ய ஆதித்யா-எல்1 விண்கலத்தை வெற்றிகரமாக ஏவிய பின் பேசிய மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங், ககன்யான் முதல் பரிசோதனை திட்டம் அடுத்த மாதம் மேற்கொள்ளப்படும் என்றார்.

பல பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு 2025-ம் ஆண்டுக்குள் விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் முதல் திட்டம் மேற்கொள்ளப்படும் என இஸ்ரோ தலைவர் சோம்நாத் தெரிவித்துள்ளார்.

**2047-ம் ஆண்டு 100-வது சுதந்திர தினத்தை கொண்டாடும்போது இந்தியா வளர்ந்த நாடாக இருக்கும்: பிரதமர் மோடி**

**புதுடெல்லி:** இந்தியா வரும் 2047-ம் ஆண்டில் 100-வது சுதந்திர தினத்தை கொண்டாடும்போது, வளர்ந்த நாடாக இருக்கும். அப்போது ஊழல், சாதி,மதவாதம் போன்ற தீயசக்திகளுக்கு இடம் இருக்காது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஜி20 அமைப்பின் 18-வது உச்சி மாநாடு டெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் கட்டப்பட்டுள்ள பாரத் மண்டபம் சர்வதேச கண்காட்சி மற்றும் மாநாட்டு அரங்கில் வரும் 9, 10-ம் தேதிகளில் நடைபெற உள்ளது. ஜி20 மாநாடு, தெற்கு ஆசியா மற்றும் இந்தியாவில் நடைபெறுவது இதுவே முதல்முறை.

**தலைவர்கள் பங்கேற்பு:** இந்த மாநாட்டுக்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமை வகிக்கிறார். அமெரிக்க அதிபர் ஜோ பைடன், இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக், ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பனேசி உட்பட ஜி20 உறுப்பு நாடுகளின் தலைவர்கள், சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்கும் நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்கின்றனர்.

ஜி20 உச்சி மாநாட்டையொட்டி, பிரதமர் நரேந்திர மோடியிடம் பிடிஐ செய்தி நிறுவனம் நேற்று சிறப்பு நேர்காணல் நடத்தியது. அதில் பிரதமர் மோடி கூறியதாவது:

இந்தியாவின் தொலைநோக்கு மற்றும் வார்த்தைகளை உலக நாடுகள் வெறும் கருத்துகளாக மட்டும் பார்ப்பது இல்லை எதிர்காலத்துக்கான வழிகாட்டுதலாகவே பார்க்கின்றன. உலக நாடுகளின் பொருளாதார மைய பார்வை, மக்கள் மைய பார்வையாக மாறி வருகிறது.இந்த மாற்றத்தில் இந்தியா வினையூக்கியாக செயல்பட்டு வருகிறது.

நீண்ட காலமாக, இந்தியா பசியால் வாடும் மக்கள் நிறைந்த நாடாக பார்க்கப்பட்டது. தற்போது உயர்ந்த லட்சியம் மற்றும் திறமையானவர்கள் கோடிக்கணக்கில் இருக்கும் நாடாக மாறியுள்ளது. இந்தியாவின் அதிக

மக்கள் தொகையால் அடுத்த சில ஆண்டுகளுக்கு சிறந்த பலன் கிடைக்கும். வளர்ச்சிக்கான அடித்தளம் அமைக்கும் சிறந்த வாய்ப்பு இன்றைய இந்தியர்களுக்கு உள்ளது.

ஒரு காலத்தில் இந்தியா மிகபெரிய சந்தையாக பார்க்கப்பட்டது. தற்போது உலகத்தின் சவால்களுக்கு தீர்வு காணும் நாடுகளில் ஒன்றாக பார்க்கப்படுகிறது.

இலவச கலாச்சாரத்தை எதிர்க்கட்சிகள் ஊக்குவிக்கின்றன. இதுபோன்ற பொறுப்பற்ற நிதி கொள்கைகள் குறுகிய கால அரசியல் பலனை தரலாம். ஆனால், நீண்டகாலத்துக்கு மிக பெரிய விலையை கொடுக்க வேண்டி இருக்கும்.

வரும் 2047-ம் ஆண்டில் 100-வதுசுதந்திர தினத்தை கொண்டாடும்போது, இந்தியா வளர்ந்த நாடாக இருக்கும். அப்போது ஊழல், சாதி,மதவாதம் உள்ளிட்ட தீயசக்திகளுக்கு கட்டாயம் இடம் இருக்காது.

சர்வதேச கூட்டங்களை டெல்லிக்கு வெளியே நடத்தும் அளவுக்கு, இதர மாநில மக்கள் மீதுமுந்தைய அரசுகளுக்கு நம்பிக்கைஇருந்ததில்லை. ஜி20 அமைப்புக்கு இந்தியா தலைமை ஏற்றிருப்பது நாட்டில் நம்பிக்கை விதையை விதைத்திருக்கிறது.


மிகவும் பின்தங்கிய மக்களின் பிரச்சினைகளை தீர்க்க இந்தியாபின்பற்றும் அணுகுமுறை, உலக அளவில் வழிகாட்டுகிறது. இந்தியா தலைமை வகிக்கும் ஜி20 மாநாட்டின் கருப்பொருளான ‘வசுதைவ குடும்பகம்’ என்பது வெறும் கோஷம் அல்ல. நமது கலாச்சார நெறிமுறைகளில் இருந்து பெறப்பட்ட பரந்த தத்துவம் ஆகும்.

ரஷ்யா - உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டுவர தூதரக அளவிலான பேச்சுவார்த்தைதான் ஒரேவழி. ஜி20 அமைப்புக்கு இந்தியா தலைமை ஏற்றாலும், இல்லாவிட்டாலும், உலக அமைதிக்கான ஒவ்வொரு முயற்சிக்கும் இந்தியா ஆதரவு அளிக்கும். இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்தார்.

சீனா, பாகிஸ்தானின் கருத்தை நிராகரித்த பிரதமர்: அருணாச்சலப் பிரதேசத்தில் ஜி20 தொடர்பான கூட்டங்கள் கடந்த மார்ச்சில் நடத்தப்பட்டன. இதில் உலக நாடுகளின் பிரதிநிதிகள் ஏராளமானோர் பங்கேற்றனர். அதபோல காஷ்மீரின் ஸ்ரீநகரில் சுற்றுலா தொடர்பான ஜி20 கூட்டம் கடந்த மே மாதம் நடத்தப்பட்டது. இங்கு கூட்டங்கள் நடத்தியதற்கு ஜி20 அமைப்பில் உறுப்பினராக உள்ள சீனாவும், உறுப்பினர் அல்லாத பாகிஸ்தானும் எதிர்ப்பு தெரிவித்தன. சீனா, பாகிஸ்தானின் கருத்துகளை நிராகரித்த பிரதமர் மோடி,

‘‘இந்த தேசத்துக்கு உட்பட்ட பகுதிகளில்தான் ஜி20 கூட்டங்களை இந்தியா நடத்துகிறது. இது இயல்பானதே’’ என்றார்.

**ஆதித்யா-எல்1 செயற்கைக்கோள் வெற்றிகரமாக செயல்படுகிறது: இஸ்ரோ**




**புதுடெல்லி:** சூரியனை ஆய்வு செய்ய அனுப்பப்பட்டுள்ள ஆதித்யா-எல்1 செயற்கைக்கோள் ஆரோக்கியமாக உள்ளதாகவும், வெற்றிகரமாக செயல்படுவதாகவும் இஸ்ரோ தெரிவித்துள்ளது.

சூரியனின் வெளிப்புறப் பகுதியை ஆராய்வதற்கான ஆதித்யா-எல்1 விண்கலம், ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் ஏவுதளத்தில் இருந்து பிஎஸ்எல்வி-சி57 ராக்கெட் மூலம் நேற்று காலை 11.50 மணிக்கு வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. 125 நாட்கள் பயணம் செய்து விண்கலன் இலக்கை அடையும். பூமியில் இருந்து சுமார் 15 லட்சம் கி.மீ. தொலைவில் உள்ள ‘லாக்ராஞ்சியன் பாயின்ட் ஒன்’ எனும் பகுதியில் இந்த விண்கலம் நிலைநிறுத்தப்பட உள்ளது. அங்கு இருந்தபடி சூரியனின் வெளிப்புறப் பகுதியின் வெப்பச் சூழல், கதிர்வீச்சு, காந்தப்புலம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்த ஆய்வுகளை ‘ஆதித்யா’ மேற்கொள்ள உள்ளது.

இந்நிலையில், ஆதித்யா-எல்1 விண்கலத்தின் நிலை குறித்து இஸ்ரோ செய்தி வெளியிட்டுள்ளது. அதில், "ஆதித்யா-எல்1 செயற்கைக்கோள் ஆரோக்கியமாக உள்ளது; வெற்றிகரமாக செயல்படுகிறது. ஆதித்யா-எல்1 விண்கலம் பூமியைச் சுற்றிச் செல்லும் முதல் சுழற்சி பெங்களூருவில் உள்ள ISTRAC மையத்தில் இருந்து வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. இதன்

சுற்றுப்பாதை 245 கிமீ x 22459 கிமீ ஆகும். அடுத்த சூழற்சி வரும் 5ம் தேதி மாலை 03:00 மணி அளவில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**டிஜிட்டல் முறையில் தடுப்பூசி விவரம் நிர்வகிக்க யு-வின் தளம்**

**புதுடெல்லி**: தடுப்பூசி செலுத்துதல் தொடர்பான அனைத்து விவரங்களையும் டிஜிட்டல் முறையில் ஒருங்கிணைத்து நிர்வகிப்பதற்கென்று மத்திய அரசு ‘யு-வின்” (U-WIN) என்ற புதிய தளத்தை உருவாக்கியுள்ளது. விரைவிலேயே இத்தளம் நாடு முழுவதும் அறிமுகம் செய்யப்பட உள்ளது.

கரோனா தடுப்பூசி தொடர்பான விவரங்களை ஒரே இடத்தில் ஒருங்கிணைக்கும் வகையில் மத்திய அரசு ‘கோ-வின்’ (CO-WIN) தளத்தை உருவாக்கியது. இதன் அடிப்படையில், ஏனைய தடுப்பூசி விவரங்களையும் ஒரே தளத்தில் ஒருங்கிணைக்க ‘யு-வின்’ தளத்தை தற்போது உருவாக்கியுள்ளது.

தடுப்பூசி செலுத்துவதற்கான காலவரம்பு, தடுப்பூசி செலுத்தியதற்கான சான்றிதழ்கள், இனி செலுத்த வேண்டிய தடுப்பூசி விவரங்கள் உள்ளிட்டவை ‘யு-வின்’ தளத்தில் ஒருங்கிணைக்கப்படும்.

குறிப்பாக, கருவுற்றிருக்கும் பெண்கள் செலுத்த வேண்டிய தடுப்பூசிகள், குழந்தை பிறப்பு, அதன் பிறகு குழந்தைகளுக்கு செலுத்த வேண்டிய தடுப்பூசி விவரங்கள் அனைத்தும் இந்த ஒரு தளத்திலிருந்து நிர்வகிக்கப்படும்.

தற்போது, தடுப்பூசி விவரங்கள் கைப்பட எழுதப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன. இதனால், தடுப்பூசி செலுத்துவதில் பல்வேறு குழப்பங்கள் நிலவுகின்றன. இந்நிலையில், ‘யு-வின்’ தளம் மூலம் தடுப்பூசி விவரங்கள் டிஜிட்டல் மயமாக்கப்படுகின்றன.

## நிலவில் ரோவர் 100 மீட்டர் நகர்ந்து ஆய்வு - இஸ்ரோ தலைவர் சோம்நாத் தகவல்



**ஸ்ரீஹரிகோட்டா:** சந்திரயான்-3 விண்கலத்தின் ரோவர் வாகனம் நிலவின் மேற்பரப்பில் 100 மீட்டர் தூரம் வரை நகர்ந்து ஆய்வு மேற்கொண்டுள்ளதாக இஸ்ரோ தலைவர் எஸ்.சோம்நாத் தெரிவித்தார்.

ஆதித்யா எல்-1 விண்கலம் நேற்று வெற்றிகரமாக ஏவப்பட்டதை அடுத்து, விஞ்ஞானிகள் மத்தியில் மத்திய இணையமைச்சர் ஜிதேந்திர சிங் பேசும்போது, "இஸ்ரோவின் தொடர் சாதனைகளை உலகமே உற்று நோக்குகிறது. இது இந்தியாவுக்கு உத்வேகமான தருணமாகும். இதற்கு வித்திட்ட பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி. இந்திய விண்வெளி ஆய்வு பணிகளுக்குத் தொடர்ந்து அவர் ஊக்கம் அளித்து வருகிறார். அதன் பலனாகவே இத்தகைய வெற்றிகளை நாம் பெற்றுவருகிறோம். ஆதித்யா எல்-1 திட்டத்தில் இரவு, பகல் பாராமல் பணியாற்றிய விஞ்ஞானிகளுக்கு வாழ்த்துகள். விண்வெளி ஆராய்ச்சியில் அடுத்த 25 ஆண்டுகளிலும், உலக அரங்கிலும் முதன்மை நாடாக இந்திய உருவெடுக்கும்" என்றார்.

**100 மீட்டர் நகர்ந்த ரோவர்:** தொடர்ந்து இஸ்ரோ தலைவர் எஸ்.சோம்நாத் பேசியதாவது: ஆதித்யா விண்கலத்தை திட்டமிட்ட சுற்றுப்பாதையில் நிலைநிறுத்துவதற்காக முதன்முறையாக பிஎஸ்எல்வி ராக்கெட்டின் இறுதி நிலையான பிஎஸ்-4 இயந்திரம் இருமுறை நிறுத்தப்பட்டு மீண்டும் இயக்கப்பட்டது. அதாவது, முதலில் 313 கி.மீ தொலைவிலான புவிவட்டப்பாதைக்கு ராக்கெட் செலுத்தப்பட்டு, அங்கிருந்து திட்டமிட்ட

இலக்கை அடைவதற்காக 217 கி.மீ ஆக அதன் உயரத்துக்கு குறைக்கப்பட்டது. இதற்காக இருமுறை இயந்திரம் நிறுத்தி இயக்கப்பட்டது. தற்போது குறைந்தபட்சம் 235 கி.மீ தொலைவும், அதிகபட்சம் 19,500 கி.மீ தொலைவும் கொண்ட நீள்வட்ட சுற்றுப்பாதையில் விண்கலம் உந்தி தள்ளப்பட்டுள்ளது. தொடர்ந்து 125 நாட்கள் பயணத்துக்கு பின்னர் ஆதித்யா விண்கலம் எல்-1 பகுதியை அடைந்து ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளும்.

சந்திரயான்-3 விண்கலத்தின் லேண்டர் மற்றும் ரோவர் சாதனங்கள் இதுவரை சிறப்பாகவே செயல்பட்டு வருகின்றன. இதில் ரோவர் வாகனம் நிலவின் மேற்பரப்பில் 100 மீட்டர் தூரம் வரைநகர்ந்து ஆய்வு மேற்கொண்டுள்ளது. நிலவில் விரைவில் இரவு தொடங்க உள்ளதால், அடுத்த ஓரிரு நாட்களில் இவ்விரு கலன்களின் செயல்பாடுகளை நிறுத்தி வைக்க திட்டமிட்டுள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

ஆதித்யா திட்ட இயக்குநர் நிகர் சாஜி பேசும்போது, ‘‘சூரியனை ஆய்வு செய்ய வேண்டும் என்ற கனவு தற்போது நனவாகியுள்ளது. இதற்கு ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி.

ஆதித்யா விண்கலம் செயல்படத் தொடங்கினால், சூரிய ஆராய்ச்சி மற்றும் அதுசார்ந்த தகவல்களை இந்தியாவும், உலக நாடுகளும் அறிந்துகொள்வதற்கான களஞ்சியமாக இது அமையும்’’ என்றார்.

**நேரில் கண்டுகளிப்பு:** பிஎஸ்எல்வி சி-57 ராக்கெட் ஏவுதல் நிகழ்வை, சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள பார்வையாளர்கள் கேலரியில் இருந்தபடி பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள் என 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர், தங்கள் குடும்பத்தினருடன் ராக்கெட் ஏவுதல் நிகழ்வை நேரில் கண்டுகளித்தனர்.

EVA STALIN IAS ACADEMY